# 22 சாமுவேல்

கடவுளுடைய சத்தத்தை தனது சிறுவயதில் செவிமடுத்த ஒரு பிள்ளையைப் பற்றி இப்பாடத்தில் நாம் கற்போம். சிறுவராகிய நீங்களும் கடவுளுடைய சத்தத்தைக் கேட்பீர்கள் என்பது நிச்சயமாகும். கடவுளுடைய சத்தத்தைக் கேள்வியுறும் நீங்கள் அதற்கு ஏற்ற பிரதி நடத்தையைக் காண்பிப்பதற்குத் தேவையான வழிகாட்டலை இப்பாடத்தின் மூலம் பெறுவீர்கள். நீங்கள் உடலிலும் அறிவிலும் வளரும் அதே வேளையில் கடவுளையும் அறிந்து கொள்ள முயற்சிக்கவும். கடவுளுடன் உங்களுடைய தொடர்பு வலுப்படும் போது நீங்கள் கடவுளுடைய சத்தத்தை செவிமடுப்பீர்கள்.




யூதர்களாகிய எல்கானா, அன்னா ஆகியோர் ராமாவில் வாழ்ந்தார்கள். அன்னாவுக்கு குழந்தைகள் இல்லாததினால் அவர் மிகவும் கவலையுற்றிருந்தார். அதனால் அவர்கள் வருடந்தோறும் சீலோவில் இருந்த கோவிலுக்கு சென்று மன்றாடினர். அன்னா கண்ணீர்விட்டு, மிகுந்த இறை நம்பிக்கையோடு ஆண்மகவு ஒருவர் தனக்குகிடைக்க வேண்டும் என்று இறைவேண்டலில் ஈடுபட்டிருந்தார். அத்தோடு அந்தமகனை இறைபணிக்கு அர்ப்பணிப்பதாகவும் பொருத்தனை செய்திருந்தார். அவருடைய கண்ணீரைக் கண்ட சீலோ தொழுகைக்கூட குரு ஏலி, கடவுள் அவருடைய மன்றாட்டிற்கு பதில் கொடுப்பார் என்ற நம்பிக்கையைக் கொடுத்தார்.

அவர்களுடைய நம்பிக்கை கைகூடி, அன்னா ஒரு ஆண்மகவைப் பெற்றெடுத்து, அவருக்கு சாமுவேல் என்று பெயரிட்டார். ''கடவுளிடம்

கேட்டுக்கொண்டது'' என்பது அப்பெயரின் பொருளாகும். அன்னா வாக்குக் கொடுத்தபடி சிறுவயதிலேயே சாமுவேலை சீலோ தொழுகைக் கூடத்தில் பணிக்கென அர்ப்பணித்து ஒவ்வொரு வருடமும் தனது மகனைப் பார்வையிட சீலோவுக்கு சென்று வந்தார். ஏலியின் பராமரிப்பிலும் வழிநடத்துதலிலும் சாமுவேல் இறைநம்பிக்கையிலும் பக்தியிலும் வளர்ந்தார்.

ஓர் இரவில், வழமைபோல் ஏலி தனது உறைவிடத்திலும், சாமுவேல் கடவுளின் பேழை (உடன்படிக்கைப் பெட்டி)வைக்கப்பட்டிருந்த ஆண்டவரின் இல்லத்திலும் உறங்கிக்கொண்டு இருந்தனர். பத்துக் கற்பனைகள் எழுதிவைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப் பெட்டிக்கு அருகில் விளக்கு ஒன்றும் ஒளிர்ந்து கொண்டிருந்தது. (அப்போது திடீரென ஒருசத்தம் தோன்றி,......)

கடவுள் : சாமுவேல்! சாமுவேல்! (ஏலி தன்னை அழைத்திருப்பார் என்று நினைத்து சாமுவேல் எழுந்து ஏலியின் அறைக்குச் செல்லல்)

சாமுவேல் : இதோ நான் என்னைக் கூப்பிட்டீர்களா?

ஏலி : நான் உன்னை அழைக்கவில்லை, திரும்பிச் சென்று படுத்துக்கொள்.

கடவுள் : சாமுவேல்! சாமுவேல்! (இரண்டாவது முறையாக) (சாமுவேல் ஏலியிடம் சென்று)

சாமுவேல் : இதோ! அடியேன். என்னை அழைத்தீர்களா?

ஏலி : நான் அழைக்கவில்லை மகனே! சென்றுபடுத்துக்கொள்

கடவுள் : சாமுவேல்,சாமுவேல் (மூன்றாவதுமுறையாக) (சாமுவேல் மீண்டும் ஏலியிடம் சென்று)

சாமுவேல் : இதோ! அடியேன். என்னை அழைத்தீர்களா? (சாமுவேலை அழைப்பது கடவுள்என்பதைஏலிஉணர்ந்தார்)

ஏலி : சென்றுபடுத்துக்கொள். உன்னை அவர் மீண்டும் அழைத்தால் அதற்கு நீ ஆண்டவரே பேசும்,உம் அடியான் கேட்கின்றேன் என்றுபதில் சொல்

கடவுள் : சாமுவேல்,சாமுவேல்

சாமுவேல் : பேசும்,உம் அடியான் கேட்கிறேன்.

ஏலியின் புத்திரர்களின் தீயசெயல்களையும், அவர்களுக்கு எதிரான கடவுளின் திட்டத்தையும் கடவுள் சாமுவேலுக்கு அறிவித்தார்.

இவ்வாறாக சாமுவேல் கடவுளின் சத்தத்துக்கு செவிசாய்த்தார்.

## இந்தசம்பவத்தின் மூலம் நாம் கற்றுக்கொள்பவை:

- அன்னா தனது மகனை வாழ்நாள் முழுவதும் ஆலயப் பணிக்கு அர்ப்பணித்தார்.
- சிறுவயதில் இருந்தே சாமுவேல் கடவுளின் சமூகத்தில் வளர்ந்தார்.
- கடவுளின் அழைப்புமக்களின் வயதுஎல்லைக்குகட்டுப்பட்டதல்ல.
- கடவுளின் சத்தத்திற்கு செவிசாய்க்க எப்போதும் ஆயத்தமாக இருக்கவேண்டும்.
- நாம் விளங்கிக் கொள்ளாதவற்றை விளங்கிக்கொள்வதற்காக வளர்ந்தோரின் உதவியை நாடுவது நல்லது.
- பெற்றோர், ஆசிரியர், குருவானவர் ஆகியோரின் அறிவுரைகளை ஏற்று நடக்க வேண்டும்.
- இறைவன் தனது பிள்ளைகளிடம் இருந்து, அவர்கள் இறைவார்த் தையை விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும், ஒவ்வொரு நாளும் இறைவேண்டலில் ஈடுபடவேண்டும் என்றும், இறை வனை முறையாக வழிபடவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார்.
- இறைசத்தத்தைக் கேட்டவுடன் தாழ்மையுடனும், நன்றியுள்ளத் துடனும் அதற்குக் கீழ்ப்படியவேண்டும்.

இளவயது சாமுவேலை அழைத்த கடவுள், தனது பணியில் பங்காளியாகச் செயல்படுவதற்கு உங்களைப் போன்ற சிறுவர்களையும் அழைப்பார். எவ்வாறான பணிக்கு கடவுள் நம்மை அழைத்தலும் அதனை ஏற்று பணியாற்ற வேண்டியது நமது கடமையாகும்.

*மனனவசனம்:*
*1 சாமுவேல் 3:10*

அப்பொழுது ஆண்டவர் வந்துநின்று, "சாமுவேல், சாமுவேல்" என்று முன்பு போல் அழைத்தார். அதற்கு சாமுவேல், 'பேசும், உம் அடியான் கேட்கிறேன்' என்று மறுமொழி கூறினான்.

செயற்பாடு

1. சாமுவேல் என்னும் பெயரின் பொருளை எழுதி, அப்பெயர் எவ்வாறு கொடுக்கப்பட்டது என்பதை விவரிக்கவும்.

2. கடவுளுடைய தொனி எமக்குகேட்கும் 3வழிகளை எழுதவும்.